தனி பஞ்சாயத்துகளில்

# துணைத்தலைவர் பதவியையும் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்க வேண்டும்

## மனித உரிமை ஆர்வலர்கள் குழு அறிக்கை

நெல்லை, ஜூன்.26– தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட பஞ்சாயத்தில், துணைத்தலைவர் பதவியும் தாழ்த்தப்பட்டோருக்கே ஒதுக்க வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் குழு அறிக்கை வெளியிட்டு உள்ளனர்.

இதுபற்றி குழுவின் தலைவரும் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினருமான தொ.பரமசிவன் கூறியதாவது:–

### ஆர்வலர்கள் குழு ஆய்வு

நெல்லை அருகே உள்ள தாழையூத்து பஞ்சாயத்து தலைவி கிருஷ்ணவேணி மீது கடந்த 13–ந்தேதி கொலை வெறி தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பாக என்னுடைய தலைமையில் சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் 8 பேர் கொண்ட குழு அமைத்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுக்குழு சார்பில் ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த அறிக்கையை முதல்–அமைச்சர் ஜெயலலிதா, தலைமை செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்க உள்ளோம். மேலும் நாளை (திங்கட்கிழமை) நெல்லை மாவட்ட கலெக்டரை சந்தித்து அறிக்கையை அளிக்க இருக்கிறோம்.

### 6 பரிந்துரைகள்

இந்த அறிக்கையில் 6 பரிந்துரைகள் செய்யப்பட்டு உள்ளது. கிருஷ்ணவேணி குடும்பத்தாருக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும். வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் கிருஷ்ணவேணிக்கு வழங்கப்பட்ட ரூ.50 ஆயிரம் இழப்பீடு தொகையை, தாக்குதலின் கொடூரம் மற்றும் இழப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு ரூ.3 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும்.

ஏற்கனவே கிருஷ்ணவேணி கொடுத்த புகார் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவரை கிருஷ்ணவேணி கொடுத்த புகார்கள் மீது நடவடிக்கை எடுக்காத போலீஸ் அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களுக்கு அரசு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும். தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பிரதிநிதிகள் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டும் தனி பஞ்சாயத்துகளில் துணைத்தலைவர் பதவிகளும் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்களுக்கே ஒதுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தொ.பரமசிவன் கூறினார்.

### குழு உறுப்பினர்கள்

பேட்டியின் போது கள ஆய்வுக்குழு உறுப்பினர்கள் சேவியர் கல்லூரி பேராசிரியர் அமலநாதன், தாமிரபரணி பண்பாட்டு அரங்கம் அமைப்பாளர் பிரிட்டோ, யாதுமாகி பதிப்பக லேனா குமார், மார்க்சிஸ்ட்– லெனினிஸ்டு கட்சி ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

தினத்தந்தி
26.06.2011

## தாழையூத்து பஞ் தலைவி மீது தாக்குதல்

# களஆய்வு அறிக்கை இன்று கலெக்டரிடம் சமர்ப்பிப்பு

## மனித உரிமை ஆர்வலர்கள் குழு தலைவர் பேட்டி

நெல்லை, ஜூன் 27: தாழையூத்து பஞ். தலைவி மீது நடந்த தாக்குதல் சம்பவம் தொடர்பான மனித உரிமை ஆர்வலர்கள் நடத்திய கள ஆய்வு அறிக்கையை இன்று (27ம் தேதி) கலெக்டரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் பரமசிவன் தெரிவித்தார்.



நெல்லையில் மனித உரிமை ஆர்வலர்கள் குழு தலைவர் பரமசிவன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் குழு தலைவர் பரமசிவன், வக்கீல் பிரிட்டோ ஆகியோர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

தாழையூத்து பஞ். தலைவி கிருஷ்ணவேணி மீது கடந்த 13ம் தேதி ஒரு கும்பல் அரிவாளால் வெட்டி தாக்குதல் நடத்தியது. இதில் அவர் படுகாயமடைந்து அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் எங்கள் குழு சார்பில் இரண்டு நாட்கள் கள ஆய்வு நடத்தப்பட்டது.

இதில் பஞ். தலைவி நேர்மையாக நடந்ததாலும் அவர் தாழ்த்தப்பட்ட பெண் என்பதாலும் அவர் தாக்கப்பட்டுள்ளார். எனவே சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். மேலும் ரு. 3 லட்சம் நிதியுதவி அளிக்க வேண்டும். இந்த வழக்கில் தலையீடு இருக்க கூடாது. தாழையூத்து பஞ். பகுதியில் நடத்தப்பட்ட கள ஆய்வின் அறிக்கையை கலெக்டரிடம் இன்று (27ம் தேதி) சமர்ப்பிக்கப்படும். அதோடு முதல்வர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இந்த அறிக்கை அனுப்பப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன், 27.06.2011

# தாழையூத்து பஞ்., தலைவிக்கு கூடுதல் பாதுகாப்பு
# முறையாக விசாரிக்காத போலீசார் மீது நடவடிக்கை
## ★மனித உரிமை ஆர்வலர்கள் குழு வலியுறுத்தல்

தினமலர், 26.06.2011

திருநெல்வேலி, ஜூன் 26—

தாழையூத்து பஞ்., தலைவிக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் குழு வலியுறுத்தினர்.

இதுகுறித்து சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் குழு தலைவர் தஞ்சை பல்கலைக் கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் தொ.பரமசிவன் நிருபர்களிடம் கூறியதாவது:

தாழையூத்து பஞ்., தலைவி கிருஷ்ணவேணி மீது கடந்த 13ம் தேதி நடந்த கொலை வெறி தாக்குதல் தொடர்பாக சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் குழுவினர் ஆய்வு நடத்தினர். பஞ்., தலைவி நேர்மையாக, திறம்பட செயல்பட்டதால் லஞ்சம் வாங்க முடியாமல் இருந்த கவுன்சிலர்கள் சிலர், வெளி நபர்கள் இணைந்து பல்வேறு பிரச்னைகளை ஏற்படுத்தி வந்தனர். தொடர்ந்து பல அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும் பஞ்., தலைவி சந்தித்து வந்தார்.

இதில் பல்வேறு தரப்பினரிடமும் நேர்காணல் செய்யப்பட்டதின் அடிப்படையில் பல்வேறு பரிந்துரைகளை அரசுக்கு செய்துள்ளோம். தாழையூத்து பஞ்., தலைவிக்கும், குடும்பத்தினருக்கும் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும். பஞ்.,தலைவிக்கு வன்கொடுமைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. கூடுதலாக 3 லட்சம் ரூபாய் இழப்பீட்டு தொகையும், மருத்துவ சிகிச்சைக்கு சிறப்பு கவனமும் வழங்க வேண்டும்.

ஏற்கனவே பஞ்., தலைவி கொடுத்த புகார் மனுக்களின் மீது போலீசார் சுதந்திரமான விசாரணை மேற்கொண்டு முறையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும். கடந்த 5 ஆண்டுகளாக முறையாக விசாரணை நடத்தாத போலீஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென் மாவட்டங்களில் பஞ்., தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளாக பணியாற்றும் அருந்ததிய மற்றும் பெண் பிரதிநிதிகளுக்கு அரசு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும். இவர்கள் திறம்பட தங்கள் பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த பிரதிநிதிகள் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்படும் பஞ்.,களில் துணை தலைவர் பதவிகளும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்க வேண்டும். பெண் பிரதிநிதிகள் தலைவர்களாக தேர்வு செய்யப்படும் பஞ்.,களில் துணைத் தலைவர் பதவிகளும் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதில் குழு உறுப்பினர்கள் வக்கீல் பிரிட்டோ, பேராசிரியர் அமலநாதன், லெனா குமார், வக்கீல் ரமேஷ் ஆகியோரும் உடனிருந்தனர்.

# ஊராட்சி மன்ற தலித் பெண் தலைவர்களுக்கு எதிரான தடைகளை அரசு நீக்க வலியுறுத்தல்

திருநெல்வேலி, ஜூன் 25: தென் மாவட்டங்களில் உள்ள ஊராட்சி மன்ற தலித் தலைவர்களுக்கு எதிரான தடைகளை அரசு நீக்க வேண்டும் என மனித உரிமை ஆர்வலர்கள் குழு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

திருநெல்வேலி அருகேயுள்ள தாழையூத்து ஊராட்சி மன்றத் தலைவி கிருஷ்ணவேணி 13.6.2011-ல் கொலைவெறித் தாக்குதலுக்கு ஆளாகி அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில், அவர் தாக்கப்பட்டதற்கான பின்னணி மற்றும் காரணங்களை கண்டறியவும், தொடர்ந்து இது போன்ற கொடூரச் சம்பவங்கள் தலித் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு நிகழாமல் இருக்கவும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்ய சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்கள், எழுத்தர்கள், மனித உரிமை ஆர்வலர்களைக் கொண்ட உண்மை கண்டறியும் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் பேராசிரியர் தொ. பரமசிவன், தூய சவேரியார் கல்லூரி பேராசிரியர்கள் ஜெ. அமலநாதன், பே. சாந்தி, மக்கள் கண்காணிப்பகம் மண்டல ஒருங்கிணைப்பாளர் சு. கணேசன், யாதுமாகி பதிப்பகம் லேனா குமார், வழக்கறிஞர் டி. ரமேஷ், வான்முகில் இயக்குநர் ம. பிரிட்டோ, ஒருங்கிணைப்பாளர் பே. மாரியப்பன் ஆகியோர் இடம் பெற்றனர். இக்குழுவினர் கடந்த 18,19-ம் தேதிகளில் பல்வேறு இடங்களில் ஆய்வு நடத்தினர். ஆய்வு முடிவு குறித்து இக்குழுவினர் சனிக்கிழமை நிருபர்களிடம் கூறியதாவது:

கொடூரத் தாக்குதலில் கிருஷ்ணவேணியின் காது பகுதி நிரந்தரமாக பாதிக்கப்பட்டுள்ளது. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் அவருக்கு மாவட்ட நிர்வாகம் ரூ. 50 ஆயிரம் இழப்பீடு வழங்கியுள்ளது. எனினும், அவருக்கு ஏற்பட்ட நிரந்தர இழப்புக்காக அரசு ரூ. 3 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று அரசை வலியுறுத்த உள்ளோம்.

கிருஷ்ணவேணி அளித்த புகாரின் பேரில் காவல்துறையினர் சுதந்திரமாக விசாரணை மேற்கொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தலித் சமுதாயத்தைச் சேர்ந்த 125 பேர் ஊராட்சி மன்றத் தலைவர்களாக உள்ளனர். இவர்களில் கிருஷ்ணவேணி உள்ளிட்ட 10 தலைவர்களுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் இருப்பதாக அரசுக்கு புகார்கள் சென்றுள்ளன.

எனவே, தலித் தலைவர்களுக்கு அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும். தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக தேர்ந்து எடுக்கும்போது துணைத் தலைவர்களாக அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்து எடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

குழுவின் பரிந்துரைகள் திங்கள்கிழமை (ஜூன் 27) மாவட்ட ஆட்சியருக்கும் அதைத் தொடர்ந்து முதல்வரின் தனிப் பிரிவுக்கும் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாக இக்குழுவினர் தெரிவித்தனர்.

தினமணி, 26.06.2011

# 'Dalit Panchayat Chief Attacked for Honesty'



**The fact-finding team revealing the details of theirreport before the media in Tirunelveli on Saturday | P Justine**

**Express News Service**
26.06.2011

**Tirunelveli**: The Dalit Panchayat president of Thalaiyuthu panchayat was attacked because she was honest, stated a fact-finding report.

A fact-finding team from the Collective of Socially Concerned Academicians, Writers, and Human Rights Activists, who released the report here today, said that P Krishnaveni(42), a 2009 Sarojini Naidu awardee, was known for efficient implementation of the rural employment scheme in the panchayat. She was also known for her honesty and integrity.

"Her honesty and unwavering spirit towards serving the people was liked by even those belonging to other castes", said the report adding that such a reputation "also earned her enmity among other members of the panchayat."

Sources said that she was seen as impediment to other panchayat members who earned money by unlawful means. The team also charged that though she filed several complaints, the District Collector and Project Officer, District Rural Development Agency (DRDA), Block Development Officer and the Superintendent of Police (SP) failed to act.

The oppressive mentality of dominant castes towards a woman, who belongs to Arunthathiyar caste, has become clearly evident from this case.

The team recommended that to prevent such attacks on Dalit panchayat presidents in the future, the concerned vice-president positions in the reserved panchayats should also be reserved for Dalits.

It was also suggested that an additional compensation of ₹3 lakh be given to Krishnaveni, apart from the mandatory ₹5000 thatis given to a victimized Dalit.

The 8-member fact-finding team included Professors T Paramasivan of Thanjavur Tamil University, J Amalanathan and P Santhi of St. Xavier's College in Palayamkottai, Lena Kumar from Yathumaki Pathipagam and M Britto, Director of Vanmukil.

## தாழையூத்து பஞ். தலைவி மீது தாக்குதல்

# விசாரணையில் எந்த குறிக்கீடும் இருக்க கூடாது

### மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்தல்

நெல்லை, ஜூன் 25-


சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் குழுத் தலைவர் தொ.பரமசிவன், வான்முகில் மற்றும் தாமிரபரணி பண்பாட்டு அரங்க அமைப்பாளர் பிரிட்டோ ஆகியோர் அளித்த பேட்டி:

தாழையூத்து ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணவேணி கடந்த 13ம் தேதி இரவு ஒரு மர்மக் கும்பல் அரிவாளால் வெட்டி கொலை வெறித் தாக்குதல் நடத்தியது.

பஞ்சாயத்து தலைவி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த பெண் என்பதாலும், நேர்மையாக செயல்பட்டதாலும் இச்சம்பவம் நடந்துள்ளது என்பது எங்கள் கள ஆய்வில் தெரியவந்தது. தாழ்த்தப்பட்டவர் என்பதால் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடந்து வருகிறது. விசாரணை எந்த வித தலையீடும் இல்லாமல் நேர்மையாக நடைபெற வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்கள் மீது இதர பிரிவினர் தாக்குதல் நடத்தினால் நிதியுதவி வழங்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



நெல்லையில் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் பேராசிரியர் தொ.பரமசிவன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

-தினத்தந்தி, உயிர்த்துடிப்பு உள்ள நாளிதழ்-

# தினத் தந்தி
DAILY THANTHI

மதுரை (5-7-2011) செவ்வாய்க்கிழமை | மலர் 69 இதழ் 245 | வெல்க தமிழ் | கர வூ ஆனி மீ 20 உ ஹிஜிரி 1432 ஷஅபான் 3

## அருந்ததியர் அமைப்புகள் ஆர்ப்பாட்டம்



தாழையூத்து ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணவேணி தாக்கப்பட்ட சம்பவத்தில் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடக்கோரி விருதுநகரில் அருந்ததியர் அமைப்புக ளின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தபோது எடுத்த படம்.

தினத்தந்தி
5.07.11